**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மன்னார்குடி**

முன்னிலை: **திரு.ஜெ.தமிழ்முருகன்,பி.ஏ.,பி.எல்.,**

நீதித்துறை நடுவர் எண்.1. மன்னார்குடி

2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 12 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**<u>ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 231/2021</u>**

## CASE SUMMARY

| Sl.No. | Description | Remarks | |
|---|---|---|---|
| 1 | The period of remand of the accused | Remanded on : Nil<br>Released on : 15.05.2019(Station Bail) | |
| 2 | The date of filing of complaint/final report in the Court | 03.07.2021 | |
| 3 | The date of committal of the case to the Court of Sessions | Not Applicable | |
| 4 | The date of Questioning of accused U/S 228, 240, 246 and 251 of the Code of Criminal producer 1973 as the case may be | 29.08.2022 | |
| 5 | Filing of all miscellaneous petitions and their result including the results on challenge before superior Court. Except routine petitions like petition under section 317 of the Code . | Nil | |
| 6 | Date of examination in Chief and Cross examination of a witness | Chief | Cross |
| | | PW1 –15.02.2024 | 15.02.2024 |
| | | PW2 – 15.02.2024 | 15.02.2024 |
| | | PW3 – 15.02.2024 | -- |
| | | PW4 – 30.01.2026 | 30.01.2026 |
| | | PW5 – 30.01.2026 | 30.01.2026 |
| | | PW6– 23.02.2026 | -- |
| | | PW7– 02.06.2026 | 02.06.2026 |
| 7 | Date of examination of the accused under section 351(1)(b) BNSS of the Court | 04.06.2026 | |
| 8 | Details of Abscondence of an accused | Not Applicable | |



JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.12 17:43:37 +0530

| | | |
|---|---|---|
| | and his appearance /production, as the case may be | |
| 9 | Grant of stay by superior Courts and the results thereof | Not Applicable |

| | | |
|---|---|---|
| **அரசுக்காக: காவல் ஆய்வாளர்,**<br>வடுவூர் காவல் நிலையம்,<br>குற்றஎண்.110/2019,<br>ச/பி. 279,304(A)IPC, | | ..........குற்ற முறையீட்டாளர் |
| | **// எதிர்//** | |
| பார்த்தசாரதி, வயது 26/2021<br>த/பெ.ரவிசந்திரன்,<br>நடுக்காடு,<br>குறவபுலம்,<br>வேதராண்யம். | /எதிர்/ | .........எதிரி |

இவ்வழக்கானது கடந்த 03.07.2021 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு, இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்து, இன்று 04.06.2026 என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்ற முறையீட்டாளர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் திருமதி.D.துர்காதேவி,B.A.,B.L.,நிலை.2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் திரு.V.தமிழ்வாணன்,M.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்த பின்னர் இன்று (12.06.2026) இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..............

**//தீர்ப்புரை//**

**1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்.**

13.05.2019 ம் தேதி காலை 08.40 மணிக்கு வடுவூர் to மன்னார்குடி மெயின் ரோடு வடுவூர் காவல் நிலைய சரகம் செருமங்கலம் VAO அலுவலகத்திற்கும் விவேகானந்தா நர்சரி பள்ளிக்கும் இடையில் கலியபெருமாள் கொல்லைக்கு எதிரில் வழக்கில் இறந்து

போன செருமங்கலம் உடையார் தெருவைச் சேர்ந்த நடேசன் மகன் ராஜவேல் 60/2019 என்பவர் தனது TN 50 V 1805 பதிவெண் கொண்ட TVS XL HEAVY DUTY இருசக்கர வாகனத்தில் மேற்கிலிருந்து கிழக்காக சாலையின் இடது புறமாக சென்ற போது அதே திசையில் பின்னால் மேற்கிலிருந்து கிழக்காக TN 92 3973 பதிவெண் கொண்ட நான்கு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த வழக்கின் மேற்படி எதிரியான பார்த்தசாரதி தான் ஓட்டி வந்த மேற்படி நான்கு சக்கர வாகனத்தை அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து செருமங்கலம் VAO அலுவலகத்திற்கு அருகில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த TN 50 AW 8578 பதிவெண் கொண்ட காரின் வலது பின்பக்கமாக உரசியவாறு சென்று காருக்கு சேதத்தை ஏற்படுத்தியும் பின்பு முன்னால் சென்று கொண்டிருந்த ராஜவேலின் இருசக்கர வாகனத்தின் மீது மோதியதில் ராஜவேலிற்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டு அதே இடத்தில் இறப்பை ஏற்படுத்தியது குற்றம். எனவே எதிரியின் செய்கையானது பிரிவு 279, 304(A)IPC ன் படி தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் புரிந்துள்ளதாக வடுவூர் காவல் ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2. நகல் வழங்கல்**

எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரிக்கு பிரிவு கு.வி.மு.ச பிரிவு 207 ன் கீழ் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

**3. குற்றச்சாட்டு வனைதல்**

எதிரியிடம் குற்றம் பற்றி வினவ போதிய முகாந்திரம் இருந்ததால் எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304(A) IPC கீழ் பிரிவு கு.வி.மு.ச பிரிவு 240(1) ன் படி குற்றச்சாட்டு வனைந்து விளக்கிக் கூறி வினவியபோது எதிரி குற்றச்சாட்டை மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டன. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையான சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டும், சான்றாவணங்கள் அ.சா.ஆ. 1 முதல் 10 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்றுப்பொருள்கள் எதுவும் குறியீடு செய்யப்படவோ இல்லை.

**4. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து புலப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்**

**அசா.1 கருப்பையன்** தனது சாட்சியத்தில் தான் விவசாய கூலி வேலை வருகிறேன் என்றும், விபத்தில் இறந்து போன நபர் தன்னுடைய அண்ணன் ஆவார் என்றும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், இவர் தான் விபத்தை ஏற்படுத்தியவர் என்பதை தெரிந்து

கொண்டேன் என்றும், கடந்த 2019 ஆம் வருடம் தேதி, மாதம் ஞாபகம் இல்லை என்றும், காலை 10.00 மணியளவில் யாரோ பெயர் தெரியாத நபர் தனக்கு போன் செய்து தனது அண்ணனுக்கு அடிப்பட்ட விபரத்தை தன்னிடம் தெரிவித்தார் என்றும், செருமங்கலம் விஏஓ ஆபிஸ் அருகே உடையார் தெருவில் இருந்து மன்னார்குடி நோக்கி டிவிஎஸ் எக்சல் வண்டியில் மேற்கிலிருந்து கிழக்காக ரோட்டின் வடக்கு பக்கம் வேலைக்காக போய் கொண்டிருந்தார் என்றும், அப்போது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி தஞ்சாவூரில் இருந்து மன்னார்குடி நோக்கி வந்த வேன் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் தன் அண்ணன் ஓட்டிய வண்டியில் பின்பக்கம் மோதி விபத்தை ஏற்படுத்தியது என்றும், அதில் தன் அண்ணன் துாக்கி எறியப்பட்டு பின் மண்டை பகுதியில் அடிப்பட்டு இரத்தக்காயத்துடன் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார் என்றும், சம்பவம் பற்றி கேள்விப்பட்டு சம்பவ இடத்திற்கு வந்தபோது தன் அண்ணன் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தார் என்றும், சம்பவ இடத்தில் ஆஜர் எதிரியை யாரும் தாக்கிவிடக்கூடாது என்று அங்கு இருந்த ஊர்க்காரர்கள் மறைத்து வைத்தியிருந்தனர் என்றும், நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு தான் கொடுத்தது தான் என்றும், அதில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**அசா.2 சுபாஷ்** தனது சாட்சியத்தில் தான் கடை வைத்துள்ளேன் என்றும், விபத்தில் இறந்து போன நபர் தன்னுடைய மாமா ஆவார் என்றும், விபத்து சம்பந்தமாக விசாரிக்கும் போது காவல் நிலையத்தில் பார்த்தேன் என்றும், கடந்த 13.05.2019 ஆம் தேதியன்று காலை 09.00 மணியளவில் செருமங்கலம் விஏஓ ஆபிஸ் அருகில் நடந்த விபத்தை தான் பார்க்க சென்ற போது அதே தேதியில் விபத்து நடந்து ஒரு மணி நேரத்தில் சம்பவ இடத்தை போலீசார் பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்து அதற்கு சாட்சியாக தானும், தர்மராஜ் என்பவரும் கையெழுத்து செய்து கொடுத்தோம் என்றும், நீதிமன்றத்தில் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள 2 வது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அந்த கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அதில் உள்ள விபரங்களை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**அசா.3 முருகையன்** தனது சாட்சியத்தில் தான் விவசாய வேலை பார்க்கிறேன் என்றும், விபத்தில் இறந்து போன நபர் தன்னுடைய ஊர்க்காரர் என்றும், ஆஜர் எதிரியை



Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.12 17:44:00 +0530

தான் பார்த்தில்லை என்றும், கடந்த 13.05.2019 ஆம் தேதியன்று காலை 09.00 மணியளவில் தான் கடைத்தெருவில் நின்று கொண்டிருந்தபோது ராஜவேல் விபத்தில் அடிப்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார் என்றும், அவரது உடலை மன்னார்குடி அரசு மருத்துவமனையில் இருப்பதாக தொலைப்பேசி மூலமாக கேள்விப்பட்டு மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சென்றபோது ராஜவேல் பிரேத்தின் மீது பிரேத விசாரணை செய்தபோது அதில் சாட்சியாக இருந்து தான் கையொப்பம் செய்தேன் என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**அசா.4 மனோகரன்** தனது சாட்சியத்தில் கடந்த 2019 ஆம் வருடம், தேதி, மாதம் ஞாபகம் இல்லை என்றும், மன்னார்குடியிலிருந்து தஞ்சாவூர் கல்லூரிக்கு சென்று கொண்டிருந்தேன் என்றும், தான் தனது காரில் தனது மனைவி மற்றும் மகளுடன் காரில் சென்றுகொண்டிருந்தேன் என்றும், மன்னார்குடியில் இருந்து 5 கி.மீ தூரத்தில் உள்ள ஒரு பள்ளி அருகே தஞ்சாவூரில் இருந்து மன்னார்குடி நோக்கி வந்து கொண்டிருந்த டெப்போ வேனை ஓட்டி வந்த நபர் வேகமாக வந்ததை பார்த்து தான் லெப்ட் அனைத்து விட்டேன் என்றும், மேற்படி நபர் அப்படி இருந்தும் தனது கார் மீது மோதி பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு நபரை அடித்து தூக்கிவிட்டார் என்றும், அதில் இருசக்கர வாகனத்தில் வந்த ஆண் நபர் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார் என்றும், தான் காரை நிப்பாட்டிவிட்டு இறங்கி ஓடினேன் தனக்கு தெரிந்த ஒரு நபர் வேனுக்குப்பின்னால் காரில் வந்தார் அவர் விரட்டி சென்று காரை வழிமறித்து நிப்பாட்டி விட்டார் என்றும், பின்னர் அந்த டிரைவரை விரட்டி சென்ற நபர் அழைத்து வந்தார் என்றும்,அவரை பார்த்தால் தன்னால் அடையாளம் காட்டமுடியும் என்றும், இந்த விபத்திற்கு வேனை வேகமாக ஓட்டிவந்த நபர் தான் காரணம் என்றும், போலீசார் விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**அசா.5 கோமதி** தனது சாட்சியத்தில் தான் கடந்த 2019 ஆம் வருடம், தேதி, மாதம் ஞாபகம் இல்லை என்றும், தனது மகள் தஞ்சாவூர் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தார் என்றும், மன்னார்குடியிலிருந்து தஞ்சாவூர் கல்லூரிக்கு சென்று கொண்டிருந்தேன் என்றும், தான் தனது கணவர் மற்றும் மகளுடன் காரில் சென்று கொண்டிருந்தோம் என்றும், தான் காரில் டிரைவர் சீட்டுக்கு அருகில் உள்ள சீட்டில் உட்கார்ந்திருந்தேன் என்றும், செருமங்கலம் அருகே தாங்கள் சென்று கொண்டிருந்தபோது திடீரென்று ஒரு சத்தம் கேட்டது என்றும், தனது கணவர் காரை நிறுத்திவிட்டார் என்றும், அப்போது தனது கணவர் காருக்கு பின்னால் வந்த ஒரு நபர் அடிப்பட்டுக்கிடந்தார் என்ன நடந்தது என்று



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.12 17:44:07 +0530

தான் நேரடியாக பார்க்கவில்லை என்றும், தனது மகளுக்கு அன்று எக்சாம் இருந்ததால் நாங்கள் உடனடியாக சென்று விட்டோம் என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**அசா.6 மோகன்ராஜ் - உதவி பேராசிரியர் தனது சாட்சியத்தில் தான்** திருவாரூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 13.05.2019 ம் தேதியன்று மன்னார்குடி அரசு தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது மாலை 04.22 மணியளவில் வடுவூர் காவல் நிலைய குற்ற எண்.110/2019 வழக்கில் சம்பந்தப்பட்ட சுமார் 60 வயதுடைய ராஜவேல் என்ற இறந்த ஆண் நபரின் சடலத்தை சடக்கூராய்வு செய்வதற்கான கடிதத்தை நிலைய ஆய்வாளரிடம் இருந்து நிலைய ஆண் காவலர் திரு. பாலமுருகன் என்பவரிடம் இருந்து பெற்றேன் என்றும், அதற்கிணங்க அன்றையதினம் மாலை 04.25 மணிக்கு பிரேத பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டது என்றும், பிரேதமானது மல்லாந்த நிலையிலும் மிதமான போஷாக்குடனும், மிதமான உடல்வாகுடனும் காணப்பட்டது என்றும், வெளியில் தெரியக்கூடிய காயங்கள்

1. வலது தோள்பட்டையில் கன்றிய காயம் இருந்தது.

2. முதுகின் மேல்புறத்தில் நிறைய சிராய்ப்பு காயங்கள் இருந்தது.

3. 3x3 cm சிராய்ப்பு காயம் வலது தோள்பட்டையில் இருந்தது.

4, 4x3 cm சிராய்ப்பு காயம் வலது தொடையில் இருந்தது.

5. கீழ் தாடையில் எலும்பு முறிவு இருந்தது.

6. 5x3x cm எலும்பின் ஆழம் வரையிலான கிழிந்த காயம் வலது முன்பக்க தலையில் இருந்தது.

7. 5x3 cm சிராய்ப்பு காயம் வலது கண்ணத்தில் இருந்தது.

மரண விரைப்பு தன்மை இரு கை மற்றும் கால்களில் இருந்தது.

<u>உள்ளாய்வு</u>

1. வலது விலாவில் 2,3,4 வலதுபுற விலா எலும்புகளில் எலும்பு முறிவு இருந்தது.

2. நுரையீரல் , கல்லீரல் , சீறுநீரகங்கள், குடல் இரத்தம் இன்றி இருந்தது.

3. இருதயம், வயிறு காலியாக இருந்தது.

4. மண்டை ஓடு வலது முன்பக்கத்தில் எலும்பு முறிவு இருந்தது

5. முதுகு தண்டு சாதாரணமாக இருந்தது.

6. மூளை சாதாரணமாக இருந்தது.



Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.12 17:44:15 +0530

சடலகூராய்வு மாலை 05.45 மணிக்கு நிறைவுற்றது என்றும், பிரேதமானது பொறுப்பு காவலர் திரு. பாலமுருகனிடம் ஒப்படைக்கப்பட்டது என்றும், இறப்பானது சடலக்கூராய்வு முன்னர் 06 ல் இருந்து 12 மணி நேரத்திற்குள் நடந்திருக்கலாம் என்றும், இறப்பானது தலை மற்றும் விலா எலும்புகளில் காயத்தினால் ஏற்பட்ட இரத்தபோக்கினால் இறந்திருக்கலாம் என்று கருத்துரை வழங்கினேன் என்றும், மேற்படி சடலக்கூராய்வு அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**அசா.7 பசுபதி -காவல் ஆய்வாளர்** தனது சாட்சியத்தில் தான் தற்போது தஞ்சாவூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகாவும் **(காணொளி மூலம் சாட்சியம் அளிக்க வேண்டுகோள் வைக்கப்பட்டு வேண்டுகோள் அனுமதிக்கப்பட்டு தற்போது தஞ்சாவூர் மாவட்ட நீதிமன்ற காணொளி அறையில் இருந்து Remote Co-ordinator சி. மணிகண்டன், Assistant Programmer Principal District Court, Thanjavur அவர்கள் தஞ்சாவூர் மாவட்ட நீதிபதி அவர்களால் நியமனம் செய்யப்பட்டு அவரது முன்னிலையில் சாட்சியம் பதிவு செய்யப்பட்டுள்ளது**) கடந்த 13.05.2019 ம் வருடம் திருவாரூர் மாவட்டம், வடுவூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன் என்றும், அன்றையதினம் காலை 09.30 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது மன்னார்குடி தாலுக்கா காரக்கோட்டை அஞ்சல், செருமங்கலம் உடையார் தெருவை சேர்ந்த நடேசன் மகன் கருப்பையன் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று வடுவூர் காவல் நிலைய குற்ற எண்.110/2019 ச/பி 304(A) இதச ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன் என்றும், மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், முதல் தகவல் அறிக்கையுடன் வாதியின் புகாருடன் இணைத்து மன்னார்குடி JM.NO.1 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும், இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான் 13.05.2019 ம் தேதியன்று 10.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் தர்மராஜ் மற்றும் சுபாஷ் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன் என்றும், சாட்சிகளிடம் கையொப்பமும் பெற்றேன் என்றும், பார்வை மகசர் மற்றும் வரைபடம் அ.சா.ஆ. 5 மற்றும் 6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், சாட்சிகளை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், இந்த வழக்கில் விபத்துக்குள்ளாகி காயம்பட்டு இறந்துபோன ராஜவேல் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் முன்னிலையில் மன்னார்குடி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை சவக்கிடங்கு முன்பு பிரேத



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.12 17:44:22 +0530

விசாரணைக்கு உட்படுத்தினேன் என்றும், சாட்சிகளையும் விசாரித்தேன் என்றும், இதற்கான அறிக்கையும் தயார் செய்தேன் என்றும், பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ-7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், பிரேதத்தினை சடல கூராய்விற்காக மருத்துவர் வசம் ஒப்படைத்தேன் சடலகூராய்விற்கு பின்னிட்டு உறவினர்கள் வசம் ஒப்படைத்தேன் என்றும், சாட்சிகள் கருப்பையன், கணேசன், முருகையன், முருகேசன், ராசு ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், அதன்பிறகு சாட்சிகள் கோமதி, சுஷ்மிதா, மனோகர் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், 15.05.2019 ம் தேதியன்று 15.30 மணிக்கு நிலையத்தில் ஆஜரான வழக்கின் எதிரி பார்த்தசாரதியை குற்றக்காரணம் கூறி கைது செய்தும், எதிரியை திரேக பரிசோதனை செய்து பாராவசம் ஒப்படைத்து பின்பு அழைக்கும் போது மன்னார்குடி JM.NO.I மன்னார்குடியில் ஆஜராக உரிய அறிவுரை கொடுத்து தக்க 2 நபர் ஜாமினில் விடுவித்தேன் என்றும், 16.05.2019-ம் தேதியன்று வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனமான TN50-AW-8578 என்ற எண்ணுள்ள Maruthi Swift Desire மற்றும் எதிரியின் வாகனமான TN92-3973 Tata Maxi Cab நான்கு சக்கர வாகனத்தினை கைப்பற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் வசம் ஆய்விற்காக உட்படுத்தினேன் என்றும், மோட்டார் வாகன ஆய்வறிக்கையும் பெற்று தாக்கல் செய்தேன் என்றும், மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கைகள் அ.சா.ஆ. 8 மற்றும் 9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், 30.05.2019 ம் தேதியன்று TN50-V-1805 TVS XL heavy duty இருச்சக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தேன் என்றும், மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை அ.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மோட்டார் வாகன ஆய்வாளரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், 05.02.2020 ம் தேதியன்று சடல கூராய்வு செய்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், சடல கூராய்வு அறிக்கையும் பெற்று தாக்கல் செய்தேன் என்றும், ஏற்கெனவே சடல கூராய்வு அறிக்கை அ.சா.ஆ-3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், இறந்த நபர் பிரேத பரிசோதனைக்கு ஆஜர் செய்து பிரேத பரிசோதனைக்கு பின் உறவினர் வசம் ஒப்படைத்த நிலைய காவலர் 1447 பாலமுருகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், இத்துடன் தனது விசாரணையை முடித்து எதிரியின் செய்கையானது இ.த.ச பிரிவுகள் 279, 304(ஏ)ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**5. எதிரியிடம் 351(1)(b) BNSS ன் கீழ் வினவுதல் :**



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.12 17:44:28 +0530

மேற்படி அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றியவற்றை தொகுத்து 351(1)(b) BNSS ன் கீழ் வினவியபோது எதிரி பொய் சாட்சியம் என்றும், பொய் வழக்கு என்றும் கூறி மறுத்தார். எதிரி தரப்பில் சாட்சியாக யாரையும் விசாரிக்கவோ ஆவணங்கள் எதுவும் குறியிடப்படவோ இல்லை.

**6. <u>தீர்மானிக்கப்படவேண்டிய விஷயம் :</u>**

இந்த வழக்கில் எதிரி மீது பிரிவுகள் 279,304(A)IPC ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றமானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? அல்லது இல்லையா? என்பதே தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை ஆகும்.

**7.** எதிரி மீது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு வழக்கானது நிரூபிக்கப்படவில்லை என்றும், அதனால் எதிரி விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

**8.** இந்நீதிமன்றத்தால் இவ்வழக்கின் எதிரி மீது பிரிவுகள் 279,304(A) IPC கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது. மேலும், அரசுத்தரப்பில் அசா 1 முதல் 7 வரையான சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டும், பட்டியல் சாட்சி 4,5,6,7,10,11,12,14 அரசுத்தரப்பில் விசாரணை செய்யப்படாமல் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் சாட்சியான காவல் ஆய்வாளர் பசுபதி அவர்கள் அ.சா.7 ஆக விசாரணை செய்யப்பட்டும், அ.சா.4 முதல் அ.சா.10 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**9.** இவ்வழக்கில் புகார்தாரராக அ.சா.1 ஆகவும், பார்வை மகசர் சாட்சியாக அ.சா.2 ஆகவும், சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சியாக அ.சா.3 ஆகவும், கண்ணுற்ற சாட்சியாக அசா.4,5 ஆகவும், மருத்துவ சாட்சியாக அசா.6 ஆகவும், விசாரணை அதிகாரியாக அ.சா.7 பசுபதி, காவல் ஆய்வாளர் அவர்களும் விசாரிக்கபட்டுள்ளார்கள்.

**10.** இந்நிலையில் எதிரி மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களானது போதுமான சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களுடன் நிரூபிக்கபட்டுள்ளதா? என்பதை தீர்மானித்தாலே இவ்வழக்கின் முடிவிற்கு போதுமானதாக இருக்கும்.

**<u>11. குற்றச்சாட்டுகளுக்கான தீர்வு</u>**

13.05.2019 ம் தேதி காலை 08.40 மணிக்கு வடுவூர் to மன்னார்குடி மெயின் ரோடு வடுவூர் காவல் நிலைய சரகம் செருமங்கலம் VAO அலுவலகத்திற்கும் விவேகானந்தா நர்சரி


JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.12 17:44:36 +0530

பள்ளிக்கும் இடையில் கலியபெருமாள் கொல்லைக்கு எதிரில் வழக்கில் இறந்து போன செருமங்கலம் உடையார் தெருவைச் சேர்ந்த நடேசன் மகன் ராஜவேல் 60/2019 என்பவர் தனது TN 50 V 1805 பதிவெண் கொண்ட TVS XL HEAVY DUTY இருசக்கர வாகனத்தில் மேற்கிலிருந்து கிழக்காக சாலையின் இடது புறமாக சென்ற போது அதே திசையில் பின்னால் மேற்கிலிருந்து கிழக்காக TN 92 3973 பதிவெண் கொண்ட நான்கு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த வழக்கின் மேற்படி எதிரியான பார்த்தசாரதி தான் ஓட்டி வந்த மேற்படி நான்கு சக்கர வாகனத்தை அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து செருமங்கலம் VAO அலுவலகத்திற்கு அருகில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த TN 50 AW 8578 பதிவெண் கொண்ட காரின் வலது பின்பக்கமாக உரசியவாறு சென்று காருக்கு சேதத்தை ஏற்படுத்தியும் பின்பு முன்னால் சென்று கொண்டிருந்த ராஜவேலின் இருசக்கர வாகனத்தின் மீது மோதியதில் ராஜவேலிற்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டு அதே இடத்தில் இறப்பை ஏற்படுத்தியது குற்றம் என எதிரியின் செய்கையானது பிரிவுகள் 279,304(A)IPC ன் படியான குற்றச்சாட்டை பரிசீலனை செய்கையில்,

**12.** அரசு தரப்பு வழக்கின் படி சம்பவ தேதி 13.05.2019 அன்று காலை 08.40 மணி என்றும், தகவல் கொடுக்கப்பட்ட தேதி 13.05.2019 காலை 09.30 மணி என்றும், சம்பவ இடமானது வடுவூர் டூ மன்னார்குடி மெயின்ரோடு செருமங்கலம் விஏஓ அலுவலம் விவேகானந்தா நர்சரிபள்ளி இடையில்- காவல் நிலையத்திலிருந்து 10.00 கி.மீ. கிழக்கு என்று ஆவணங்களின் மூலம் தெரியவருகிறது. மேலும் முதல் தகவல் அறிக்கை 21.05.2019 ம் தேதி மதியம் 01.34 மணிக்கு நீதிமன்றத்தில் பெறப்பட்டுள்ளது. அரசு தரப்பு வழக்கின் படி 13.05.2019 ம் தேதி 10.15 மணிக்கு சம்பவ இடத்தை போலீசார் பார்வையிட்டதாக அ.சா.ஆ.5 மூலம் தெரியவருகிறது.

**13.** புகார்தாரரின் அண்ணன் அ.சா.1 கருப்பையன் தனது சாட்சியத்தில்" கடந்த 2019 ம் வருடம் தேதி, மாதம் ஞாபகம் இல்லை என்றும், காலை 10.00 மணியளவில் யாரோ பெயர் தெரியாத நபர் தனக்கு போன் செய்து தனது அண்ணனுக்கு அடிப்பட்ட விபரத்தை தன்னிடம் தெரிவித்தார் என்றும், செருமங்கலம் விஏஓ ஆபிஸ் அருகே உடையார் தெருவில் இருந்து மன்னார்குடி நோக்கி டிவிஎஸ் எக்சல் வண்டியில் மேற்கிலிருந்து கிழக்காக ரோட்டின் வடக்கு பக்கம் வேலைக்காக போய் கொண்டிருந்தார் என்றும், அப்போது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி தஞ்சாவூரில் இருந்து மன்னார்குடி நோக்கி வந்த வேன் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் தன் அண்ணன் ஓட்டிய வண்டியில்



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.12 17:44:44 +0530

பின்பக்கம் மோதி விபத்தை ஏற்படுத்தியது என்றும், அதில் தன் அண்ணன் தூக்கி எறியப்பட்டு பின் மண்டை பகுதியில் அடிப்பட்டு இரத்தக்காயத்துடன் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார் என்றும், சம்பவம் பற்றி கேள்விப்பட்டு சம்பவ இடத்திற்கு வந்தபோது தன் அண்ணன் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தார் என்றும், சம்பவ இடத்தில் ஆஜர் எதிரியை யாரும் தாக்கிவிடக்கூடாது என்று அங்கு இருந்த ஊர்க்காரர்கள் மறைத்து வைத்தியிருந்தனர் என்றும், நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு தான் கொடுத்தது தான் என்றும், அதில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியமளித்துள்ளார்.

14. அ.சா.1 கருப்பையன் தனது குறுக்கு விசாரணையில் " இந்த சம்பவம் எதுவும் எனக்கு நேரிட்டு தெரியது என்றால் சரி தான். அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள புகார் யார் எழுதினார் என்ற விவரம் எனக்கு தெரியாது அதில் உள்ள கையொப்பம் மட்டும் என்னுடையது தான். இந்த புகாரை என் அண்ணன் மகன் என்பவர் எழுதினார் அதில் என்ன எழுதி இருந்ததது என்ற விபரம் எனக்கு தெரியது. என் அண்ணனுக்கு இருசக்கர வாகனம் ஒட்டுவதற்கான லைஸ்சன்ஸ் இல்லை என்று சொன்னால் சரிதான்" என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 விபத்து குறித்து அவரது உறவினரான அதே ஊரை சேர்ந்த சோமு மகன் கணேசன் என்பவர் காலை 08.45 மணிக்கு போன் செய்ததாக போலீசார் விசாரணையில் கூறியுள்ள நிலையில் அ.சா.1 கருப்பையன் நீதிமன்றத்தில் காலை 10.00 மணி அளவில் யரோ பெயர் தெரியாத நபர் தனக்கு போன் செய்து அவரது அண்ணனுக்கு அடிப்பட்ட விபரத்தை தெரிவித்ததாக சொல்லியுள்ளது அரசுத்தரப்பு வழக்கை பாதிப்பதாக உள்ளது.

15. அரசுத்தரப்பில் கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.4 மனோகரன் தனது சாட்சியத்தில் "கடந்த 2019 ஆம் வருடம், தேதி, மாதம் ஞாபகம் இல்லை என்றும், மன்னார்குடியிலிருந்து தஞ்சாவூர் கல்லூரிக்கு சென்று கொண்டிருந்தேன் என்றும், தான் தனது காரில் தனது மனைவி மற்றும் மகளுடன் காரில் சென்றுகொண்டிருந்தேன் என்றும், மன்னார்குடியில் இருந்து 5 கி.மீ தூரத்தில் உள்ள ஒரு பள்ளி அருகே தஞ்சாவூரில் இருந்து மன்னார்குடி நோக்கி வந்து கொண்டிருந்த டெப்போ வேனை ஓட்டி வந்த நபர் வேகமாக வந்ததை பார்த்து தான் லெப்ட் அனைத்து விட்டேன் என்றும், மேற்படி நபர் அப்படி இருந்தும் தனது கார் மீது மோதி பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு நபரை அடித்து தூக்கிவிட்டார் என்றும், அதில் இருசக்கர வாகனத்தில் வந்த ஆண் நபர் சம்பவ


JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.12 17:44:51 +0530

இடத்திலேயே இறந்து விட்டார் என்றும், தான் காரை நிப்பாட்டிவிட்டு இறங்கி ஓடினேன் தனக்கு தெரிந்த ஒரு நபர் வேனுக்குப்பின்னால் காரில் வந்தார் அவர் விரட்டி சென்று காரை வழிமறித்து நிப்பாட்டி விட்டார் என்றும், பின்னர் அந்த டிரைவரை விரட்டி சென்ற நபர் அழைத்து வந்தார் என்றும், அவரை பார்த்தால் தன்னால் அடையாளம் காட்டமுடியும் என்றும், இந்த விபத்திற்கு வேனை வேகமாக ஓட்டிவந்த நபர் தான் காரணம் என்று சாட்சியமளித்துள்ளார்.

அ.சா.4 மனோகரன் தனது குறுக்கு விசாரணையில் " தான் கிழக்கில் இருந்து மேற்காக தனது வாகனத்தை செலுத்தினேன் என்றும், விபத்தை ஏற்படுத்தியதாக கூறப்படும் வாகனம் மேற்கிலிருந்து கிழக்காக வருகிறது என்றும், அதனால் தனது வாகனத்திற்கு பின்புறம் தன்னால் பார்ப்பது என்பது இயலாத காரியம் என்றும், **சம்பவ இடத்திற்கு அருகில் ஒரு குறுக்கு சந்து ஒன்று உள்ளது என்றால் சரிதான் என்றும்,** விபத்தில் இறந்துபோன ராஜவேல் என்பவர் தனது இருசக்கர வாகனத்தை குறுக்காக ஓட்டி வந்ததனால் விபத்தினை தவிர்ப்பதற்காக இவ்வழக்கின் எதிரி தனது வாகத்தை திருப்பும் பொழுது தனது வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல என்றும், தான் தனக்கு ஏற்பட்ட பாதிப்பிற்காக காப்பீடு பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரிதான் என்றும், தான் சொல்வது போல் சம்பவம் இல்லை என்றும், போலீசார் விசாரணையில் சொல்லாத விவரங்களை தற்பொழுது நீதிமன்றத்தில் புதிதாக சொல்கிறேன் என்றும், இந்த விபத்து எதிரியின் செய்கையினால் ஏற்படவில்லை என்றும், இறந்து போன ராஜவேல் என்பவர் ஓட்டிய வாகனத்தை முறை தவறி இயக்கியதால் ஏற்பட்டு என்றால் சரியல்ல என்று சாட்சியமளித்துள்ளார்.

அ.சா.4 மனோகரன் தனது TN 50 AW 8578 என்ற பதிவெணன் கொண்ட New desire காரில் கிழக்கிலிருந்து மேற்காக சென்று கொண்டு இருந்த போது எதிரே வந்த மேற்கில் இருந்து கிழக்காக TN 92 -3973 என்ற வேனை ஓட்டி வந்த நபர் அவரது காரில் வலது புறம் பக்கவாட்டில் உரசியவாறு சென்று பின்னர் TN 50 V 1805 என்ற எண் கொண்ட TVS XL heavy duty காரில் மோதினார் என்று சாட்சியமளித்துள்ளார் ஆனால் அ.சா.ஆ.6 மாதிரி வரைப்படத்தில் சம்பவ இடமானது தஞ்சாவூர் டூ மன்னார்குடி தார் சாலையில் நான் வட புற ஓரமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

16. அசா.5 கோமதி தனது சாட்சியத்தில் " கடந்த 2019 ஆம் வருடம், தேதி, மாதம் ஞாபகம் இல்லை என்றும், தனது மகள் தஞ்சாவூர் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தார்

என்றும், மன்னார்குடியிலிருந்து தஞ்சாவூர் கல்லூரிக்கு சென்று கொண்டிருந்தேன் என்றும், தான் தனது கணவர் மற்றும் மகளுடன் காரில் சென்று கொண்டிருந்தோம் என்றும், தான் காரில் டிரைவர் சீட்டுக்கு அருகில் உள்ள சீட்டில் உட்கார்ந்திருந்தேன் என்றும், செருமங்கலம் அருகே தாங்கள் சென்று கொண்டிருந்தபோது திடீரென்று ஒரு சத்தம் கேட்டது என்றும், தனது கணவர் காரை நிறுத்திவிட்டார் என்றும், அப்போது தனது கணவர் காருக்கு பின்னால் வந்த ஒரு நபர் அடிப்பட்டுக்கிடந்தார் என்ன நடந்தது என்று தான் நேரடியாக பார்க்கவில்லை என்றும், தனது மகளுக்கு அன்று எக்சாம் இருந்ததால் நாங்கள் உடனடியாக சென்று விட்டோம் என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

17. அ.சா.ஆ 6 மாதிரி வரைப்படத்தில் தஞ்சாவூர் டூ மன்னார்குடி தார் சாலையில் அகலம் மட்டும் 24 அடி என்றும், அதன் இருபுறமும் 3 அடி அகலம் உள்ள மண் ரோடு இருப்பதாக தெரிய வருகிறது. சம்பவ இடமானது தஞ்சாவூலிருந்து மன்னார்குடி வரும் தார் சாலையில் இடது புறம் ஓரமாக குறிப்பிடப்பட்டுள்ளது.காரனது மேற்படி வரைப்படத்தில் காரனது மேற்படி சாலையின் வலது புற ஓரமாக நிற்பதும் தெரிய வருகிறது.

18. அ.சா.ஆ.8 மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் TN 50 AW 8578 Muruthi desire காருக்கு Right side rear door damage,right side rear fender damage,rear right side tire damage என்றும், Not due to any mechanical defect of the vechicle என்றும் சொல்லப்பட்டுள்ளது.

19. அ.சா.ஆ.9 மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் TN92 3973- Maxi Cab காருக்கு Front left side bumper damage, front wind screen damage என்றும், Not due to any mechanical defect of the vechicle.

20. அ.சா.ஆ.10 மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் TN50 V 1805 XL Super HD இருசக்கர வாகனத்திற்கு Rear tail light assembly damage, rear number plate damage, rear fender damage, rear pillion handle damage, right driver foot rest damage.

21. இவ்வழக்கில் அ.சா.1 கருப்பையன் என்பவருக்கு போன் மூலம் தகவல் சொன்ன சோமு மகன் கணேசன் என்பவர் சாட்சிய விசாரிக்கப்படவில்லை என்பதும் அரசுத்தரப்பு வழக்கை பாதிப்பதாக உள்ளது.

22. அரசு தரப்பில் பார்வை மகசர் சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.2, கடந்த 13.05.2019 ஆம் தேதியன்று காலை 09.00 மணியளவில் செருமங்கலம் விஏஓ ஆபிஸ்



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.06.12 17:45:10 +0530

அருகில் நடந்த விபத்தை தான் பார்க்க சென்ற போது அதே தேதியில் விபத்து நடந்து ஒரு மணி நேரத்தில் சம்பவ இடத்தை போலீசார் பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்து அதற்கு சாட்சியாக தானும், தர்மராஜ் என்பவரும் கையெழுத்து செய்து கொடுத்தோம் சாட்சியமளித்துள்ளார்.

23. இவ்வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.4 மனோகரன் அ.சா.5 கோமதி ஆகியோரின் சாட்சியங்களில் இருந்து விபத்து சம்பவம் நடைபெற்ற விதம் மற்றும் மாதிரி வரைப்படத்தில் கண்டுள்ள விபரங்கள் ஆகியவைகளை கவனிக்கையில் அ.சா.4 சொன்ன விதத்தில் விபத்து நடைபெற்றதா? என்ற ஐயம் எழுகிறது. மேலும், அ.சா.4 மனோகரனின் காரை எதிரி ஓட்டி வந்த வாகனம் உரசி சென்றதாக கூறப்படும் நிலையில் எவ்வாறு அதன் எதிர் புறம் மறுபடியும் சென்று இறந்த ராஜவேலு ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் பின் புறம் மோதியது என்பது குறித்து எவ்வித அரசு தரப்பு சாட்சிம் அளிக்கவில்லை. எனவே அரசு தரப்பு வழக்கின் படித்தான் விபத்து நடைபெற்றதா? எதிரியின் கவன குறைவு மட்டும் தான் இந்த விபத்துக்கு காரணமா? என்ற ஐயம் எழுகிறது. அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோர்களின் சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கு இடம் இன்றி உறுதியூட்டும் விதமாக அமையவில்லை என்று நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

24. மேற்கண்ட சாட்சியத்தினை பரிசீலனை செய்த வகையில் எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தினை ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார் என்பதனை நிரூபிக்க போதுமானதாக சாட்சியாக இல்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

25. இறுதியாக, இவ்வழக்கின் எதிரி மீது பிரிவு 279,304(A)IPC -ன் கீழ் குற்றவாளி அல்ல என இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டு பிரிவு 278(1) BNSS ன் கீழ் எதிரியை இந்நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கின்றது.

26. இவ்வழக்கில் வழக்கு தடயச்சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அது குறித்த உத்தரவு ஏதும் இல்லை.

27. எதிரி எழுதிக்கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டுக் காலத்திற்கு பிறகு தானாக ரத்தாக வேண்டியது.



JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.12 17:45:17 +0530

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 12 ஆம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.12 17:45:23 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
மன்னார்குடி.

**1. புகார்தாரர்/ மனுதாரர் தரப்பு சாட்சி :**

| சாட்சியின் வரிசை எண். | சாட்சியின் பெயர் | குறிப்பு |
|---|---|---|
| அசா.1 | கருப்பையன் | புகார்தாரர் சாட்சி |
| அசா.2 | சுபாஷ் | பார்வை மகசர் |
| அசா.3 | முருகையன் | சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சி |
| அசா.4 | மனோகரன் | கண்ணுற்ற சாட்சி |
| அசா.5 | கோமதி | கண்ணுற்ற சாட்சி |
| அசா.6 | மோகன்ராஜ்-உதவி பேராசிரியர் | பிரேத பரிசோதனை செய்த சாட்சி |
| அசா.7 | பசுபதி | விசாரணை அதிகாரி சாட்சி |

**2. புகார்தாரர்/ மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:**

| சான்றாவணங்களின் வரிசை எண். | தேதி | சான்றாவணம் குறிப்பு | சான்றளிக்கப்பட்ட/ ஒப்பமிட்டவரின் விவரம் |
|---|---|---|---|
| அ.சா.ஆ. 1 | 13.05.2019 | புகார் மனு | அ.சா.ஆ.1- மூலம் |
| அ.சா.ஆ. 2 | 13.05.2019 | பார்வை மகசரில் உள்ள 2- | அ.சா.ஆ.2- மூலம் |

| | | | |
|---|---|---|---|
| | | வது கையொப்பம் | |
| அ.சா.ஆ. 3 | 13.05.2019 | சடலக்கூராய்வு | அ.சா.ஆ.6-மூலம் |
| அ.சா.ஆ. 4 | 13.05.2019 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.ஆ.7- மூலம் |
| அ.சா.ஆ. 5 | 13.05.2019 | பார்வை மகசர் | அ.சா.ஆ.7- மூலம் |
| அ.சா.ஆ. 6 | 13.05.2019 | வரைப்படம் | அ.சா.ஆ.7- மூலம் |
| அ.சா.ஆ. 7 | 13.05.2019 | பிரேத விசாரணை அறிக்கை | அ.சா.ஆ.7- மூலம் |
| அ.சா.ஆ. 8 | 16.05.2019 | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை (TN 50-AW-8578)-Maruthi Swift Desire | அ.சா.ஆ.7- மூலம் |
| அ.சா.ஆ. 9 | 16.05.2019 | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை (TN92-3973)-Tata Maxi Cab | அ.சா.ஆ.7- மூலம் |
| அ.சா.ஆ. 10 | 30.05.2019 | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை (TN50-V-1805 - TVS XL Heavy Duty) | அ.சா.ஆ.7- மூலம் |

3. **அரசு தரப்பு சான்று பொருள் :1)** இல்லை

4.எதிரி தரப்பு சாட்சிகள்,சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்: இல்லை

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.12 17:45:38 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.

**குறிப்பு**

1) வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்கள்.



JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.12 17:45:44 +0530

2) எந்த சாட்சிகளும் மூன்று முறைக்கு மேல் அழைக்கப்படவில்லை.

3)வழக்கின் முடிவு எதிரிக்கும் காவல்துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

**<u>நகல் பணிந்து சமர்பிக்கப்படுகிறது</u>**

மாண்புமிகு குற்றவியல் தலைமை நீதித்துறை நடுவர் அவர்கள்,

திருவாரூர்.

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.12 17:45:54 +0530